DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C. “ | : | 188/2022 |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 5 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | பழனியப்பன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.03.2024

**முதல் விசாரனை:**

நான் தற்போது சென்னை விருகம்பாக்கத்தில் ஜெயலெட்சுமி தெரு வெங்கடேஷ் நகரில் வசித்து வருகிறேன். நான் ஐடி கம்பேனியில் பணிபுரிந்து வருகிறேன். சாட்சி அ.சா.1 இராமநாதன் என்பவர் என்னுடைய தகப்பனார் ஆவார். சாட்சி பட்டியலில் உள்ள பூங்கோதை எனது தாயார் ஆவார். வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளான கணேசன், ஆறுமுகம் மற்றும் சிதம்பரம் ஆகியோரை தெரியும். சாட்சி பட்டியலில் உள்ள சபாரத்தினம் எனது சித்தப்பா ஆவார். வழக்கின் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 13.03.2016 தேதியில் நான் சென்னையில் இருக்கும் போது மதியம் சுமார் 2.00 மணியளவில்காரைக்குடியில் இருந்து சிங்கப்பூர் சாப்பிங் சென்டர் நடத்தி வரும கணேசன் என்பவர் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது தகப்பனார் ராமநாதனை வழக்கின் 1-வது எதிரி இராஜசேகர் என்பவர் எனது தகப்பனாரை அசிங்கமான வார்த்தைகளால் பேசியும் ஏற்கனவே என்னை கேஸ் கொடுத்து என்னை மாட்டி விட்டதாக சொல்லியும் வெட்டி விட்டதாகவும் மேலும் எனது தகப்பனாரை சாட்சிகள் கணேசனும் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் சேர்ந்த காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு

கொண்டுசென்று சேர்த்து விட்டதாகவும் மேலும் எனது தகப்பனார் ராமநாதனுக்கு வலது பக்க தலை, தொடை பகுதி, கை கால் பகுதிகளில் வெட்டுக்காயம் ஏற்பட்டு இரத்தப்போக்கு அதிகமாக இருந்த காரணத்தினாலும் மேல் சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமகைக்கு கொண்டு செல்ல பரிந்துரை செய்ததாகவும், அதன் பின்னர் எங்களது உறவினர் சிதம்பரம் என்பவர் எனது தகப்பனாரை காயங்கள் பெரிதாக உள்ளதால் மதுரை மீனாட்சி மிசன் மருத்தவமனைக்கு கொண்டு சென்று சேர்த்ததாகவும் பிறகு கணேசன் மற்றும் சிதம்பரம் தொலைபேசியில் என்னிடம் தகவல் தெரிவித்தன் பேரில் நான் சென்னையில் இருந்து புறப்பட்டு சுமார் இரவு 8.00,9.00 மணியளில் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் தீவர சிகிச்சை பிரிவில் இருந்த என் தகப்பனாரை நான் நேரில் சென்று பார்த்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸ்சார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

என் கணவருக்கும் 1-ம் எதிரி இராஜசேகருக்கும் இடையே உரிமையியல் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். காரைக்குடி கண்டனூர் ரோட்டில் உள்ள வீட்டிற்கு வழக்கு நடக்கிறது. அந்த வீட்டில் இராஜசேகர் மாமியாருக்கும் பங்கு உள்ளது. அதில் 6 லைன் வீடுகள் உள்ளது. அந்த வீட்டை அனைவரும் கூட்டாகத்தான் பராமரித்து வருகிறோம். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அ.சா. 2 கணேசன் சொல்லித்தான் தெரியும்.

DEPOSITION OF WITNESS
---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C. “ | : | 188/2022 |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W.6 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | பூங்கோதை |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.03.2024

**முதல் விசாரனை:**

நான் காரைக்குடியில் டி.டி.நகர் முதல் வீதியில் வசித்து வருகிறேன். அ.சா.1 இராமநாதன் எனது கணவர் ஆவார். சாட்சி பழனியப்பன் எனது மகன் ஆவார். இந்த வழக்கின் சாட்சிகளான கணேசன், ஆறுமுகம் மற்றும் சிதம்பரம ஆகியோரை எனக்கு தெரியும். வழக்கின் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 13.03.2016 ம்தேதியில் நான் பழனிக்கு முருகன் கோவிலுக்கு சென்று இருந்தேன். சுமார் பகல்1 1/4 மணியளவில் எனது கணவரை காரைக்குடியில் எனது வீட்டில் வைத்து வழக்கின் 1-வது எதிரி இராஜசேகர் என்பவர் அசிங்கமாக என் கணவரை பேசியும், நீ தானே என்னை கேஸில் சேர்த்து விட்டாய் என்று சொல்லியும் எனது கணவரை கை கால், தலை பகுதியில் வெட்டிவிட்டதாக சிங்கப்பூர் சாப்பிங் சென்டர் வைத்து இருதுக்கும் கணேசன் என்பவர் தொலைபேசியில் சொன்னார். அய்யோ காப்பாத்துங்கள் காப்பாத்துங்கள் என்று என் கணவரின் அலறல் சத்தம் கேட்கவும் கணேசன் மற்றும் ஆறுமுகம் சேர்ந்து காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு

கொண்டுசென்றதாகவும் அதன் பிறகு மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பரிந்துரை செய்யதாகவும், பிறகு காயம் அதியமாக இருந்ததால் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு என் கணவர் சிகிச்சையில் இருந்தவரை நான் சென்று பார்த்தேன். வழக்கு சம்பந்தமாக என்னை போலீஸ்சார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

என் கணவருக்கும் 1-ம் எதிரி இராஜசேகருக்கும் இடையே உரிமையியல் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். காரைக்குடி கண்டனூர் ரோட்டில் உள்ள வீட்டிற்கு வழக்கு நடக்கிறது. அந்த வீட்டில் இராஜசேகர் மாமியாருக்கும் பங்கு உள்ளது. அதில் 6 லைன் வீடுகள் உள்ளது. அந்த வீட்டை அனைவரும் கூட்டாகத்தான் பராமரித்து வருகிறோம். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அ.சா. 2 கணேசன் சொல்லித்தான் தெரியும்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.